DETECTIVE **KARTHICK ALDO** SERIES

# சிரம் தர விரும்ப



Sen Balan


DETECTIVE KARTHICK ALDO SERIES
சிரம் தர விரும்ப
Sen Balan



# முன்கதை

ஹலோ!!!

ஹலோ! என்ன மூணு நாளா கால் பண்ணவே இல்ல?

அவர் வீட்ல இருந்தார். எப்படி பண்றது?

என்ன ஆச்சு அவனுக்கு? வேலையை விட்டுடானா?

அதெல்லாம் இல்ல. வாயைக் கழுவு. அவருக்குக் கையில அடிபட்ருச்சு. மிசின் வெட்டிருச்சு. அதனால கம்பெனில லீவ் கொடுத்துட்டாங்க.

நான் வாங்கி அனுப்புன சேலை வந்துச்சா?

வந்துருச்சு. கரெக்டா அவர் வீட்ல இருக்க அன்னைக்கு தான் அனுப்புவியா?

உன் புருஷன் வீட்ல இருப்பான்னு எனக்கு எப்படித் தெரியும்? மாட்டிகிட்டியா என்ன?

மாட்டிகிட்டா இப்படி போன் பேச முடியுமா? அறிவு. என் சினேகிதி அவ அண்ணன்கிட்ட கொடுத்து அனுப்பிருக்கான்னு சமாளிச்சுட்டேன். நம்பிட்டார்.

எத்தனை நாள் தான் போன்லயே கொஞ்சுறது? நேர்ல எப்ப தான் வருவ?

கொஞ்ச நாள் பொறு புஜ்ஜிமா.

இப்படியே சமாளி.

ஏய், வெயிட்........ யாரோ வர்றாங்க. நான் அப்பறம் பேசுறேன்.

◆ ◆ ◆

# அத்தியாயம் 1

எட்டு மணிக்கே சூரியன் பளீரென்று அடித்தது. கண்ணாடி வழியே ஊடுருவி காரின் ஏ.ஸியை மீறி உரைத்தது. கார்த்திக் ஆல்டோ, முழுதானியங்கி குளிர்சாதன வசதியின் (fully automatic A.C) வெப்பஅளவை 21 டிகிரிக்குக் குறைத்தான். சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை. ஏதோ ஒரு கிராமத்தில் இருந்து வந்த பேருந்து முக்கி முக்கி நெடுஞ்சாலையில் ஏறிக் கொண்டிருந்தது. சாலையின் இருபுறமும் ஆ'றி'ய பவன்கள். அவற்றில் உணவு இருக்கோ இல்லையோ, ஒருவர் கொடியோடு நின்று முரட்டுத்தனமாக அசைத்துக் கொண்டிருந்தார். ஏடிஎம் காவலாளி, இந்த கொடி ஆட்டுபவர் இவர்களைப் பார்த்தால் இனம் புரியா கவலை ஆல்டோவிற்கு வந்துவிடும். கொடிது கொடிது இளமையில் வறுமை அல்ல. முதுமையில் வறுமை. மேலும் இந்தக் கொடியைப் பார்க்கும் போதெல்லாம் "வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட" சிலப்பதிகாரம் நினைவுக்கு வரும். கூடவே தற்குறிப்பேற்ற அணி, தமிழ் ஆசிரியர், க்ரூப் ஒன் தேர்வு, தமிழ் இலக்கண வினாத்தாள் அனைத்தும் நினைவுக்கு வரும்.

கார் தொழுப்பேடு டோல்கேட் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. திண்டிவனம் 18 கி.மி தகவல் பலகையைப் பார்த்ததும் தற்குறிப்பேற்ற அணியில் இருந்து தற்காலத்திற்கு வந்தான் ஆல்டோ.

"சரியா திண்டிவனத்திற்குப் பத்து கிலோமீட்டர் முன்னாடி, ஒலக்கூர் தாண்டுன உடனே, ஒரு பெரிய வளைவு வரும். அங்க இருந்துப் பார்த்தாலே போலிஸ் வண்டி நிக்குறது தெரியும்" எஸ்.ஐ பாலகிருஷ்ணன்

குரலை மறுபடியும் மனதிற்குள் நியாபகப்படுத்திக்கொண்டான். அதேபோல வளைவு தாண்டியதும் நெடுஞ்சாலையில் இருந்து உள்ளே பொட்டல் வெளியில் கூட்டமாக சிலர் நிற்பது தெரிந்தது. சாலையை விட்டுப் பாதுகாப்பான தூரத்தில் காவல் என்று எழுதப்பட்ட டாட்டா சுமோ நின்றது. அதன்பின் தனது காரை நிறுத்தினான். இறங்கி கூட்டத்தை நோக்கிச் சென்றான்.

“ஐயா டிஎஸ்பி சார் வந்துட்டார்.” ஒரு விசுவாசமான ஏட்டு குரல் கொடுத்தார். எஸ்.ஐ பாலகிருஷ்ணன் சல்யுட் அடித்துக் கைகொடுத்தார்.

“நான் உங்க கிட்ட போன்ல சொன்ன மாதிரி, பால்க்காரர் ஒருத்தர் காலையில் பார்த்துட்டு தகவல் கொடுத்தார் சார். உடனே வந்து சீன் ஆப் கிரைமை செக்யூர் பண்ணிட்டோம். உங்களுக்காகத் தான் வெய்டிங் சார்.”

ஆல்டோ அந்த இடத்தை நெருங்கிப் பார்த்தான். உடம்பில் துணி இல்லாமல் முற்றிலும் நிர்வாணமாய் தலை நசுக்கப்பட்டு ஒரு பெண் பிணம். தலை இருந்த இடத்தில் கொஞ்சம் சதையும் எலும்புத் துணுக்குகளும் இருந்தன.

# அத்தியாயம் 2

கார்த்திக் ஆல்டோ சிறுகுறிப்பு வரைக.

அவன் என்ன ஐந்து மதிப்பெண் கேள்வியா? இருந்தாலும் இக்கதையை நீங்கள் பொறுமையாகப் படிப்பதால் சொல்கிறேன். முழுப்பெயர் கார்த்திக் ஆல்டோ இராமசாமி. பொறியியல் இளங்கலை முடித்துவிட்டு ஐபிஎஸ் கனவோடு டெல்லி சென்றான். சாணக்கியாவில் ஆரம்பித்து நேஷனல் வரை அனைத்துக் கோச்சிங் சென்டர்களிலும் தலா ஒருவருடம் பயிற்சி பெற்று களமிறங்கி ப்ரிலிம்ஸ், மெயின், இண்டர்வியு என ஏதாவது ஒரு இடத்தில் டக் அவுட் ஆகி பவுண்டரிக்குத் திரும்பினான். பெரும்பாலும் அது இண்டர்வியுவாகத்தான் இருக்கும். ஐந்தாவது முறை இது வேலைக்காகாது என சென்னை திரும்பி ஒரு கால் சென்டரில் “ஹலோ ஹவ் கேன் ஐ ஹெல்ப் யூ” எனக் கொஞ்சிக் கொண்டிருந்தான். ஆறே மாதத்தில் கால் சென்டர் போர் அடித்து பழைய காதல் தலைதூக்க மீண்டும் சங்கர், மனிதநேயம். இந்த முறை க்ரூப் ஒன் தேர்வில் வெற்றி பெற்றான். டிஎஸ்பி பதவி கிடைத்தது. இவனோடு க்ரூப் ஒன் தேர்வு எழுதியவர் தான் எஸ்.ஐ. பாலகிருஷ்ணன். அவருக்கு க்ரூப் ஒன் தவற, நேரடி துணை ஆய்வாளர் தேர்வு எழுதி எஸ்.ஐ ஆகி விட்டார். தனியாக இருக்கும் போது பாலகிருஷ்ணன், ஆல்டோவைப் பெயர் சொல்லி அழைத்தாலும் மற்றவர்கள் முன் சார் தான். ஆல்டோவிற்கு டிஎஸ்பி ஆன பிறகும் ஐபிஎஸ் ஆக முடியாத வருத்தம் இருந்தது. இந்தியா இல்லை என்றால் உலக அளவில் முயற்சிப்போம் என்று ஏதேதோ போட்டித் தேர்வு, நுழைவுத் தேர்வை எழுதிக் கொண்டே இருந்தான். அப்படித் தான் ஐக்கிய முடியரசின் எடின்பரோ பல்கலைகழகத்தில் கிரிமினாலஜி படிக்கும் வாய்ப்பு வந்தது. அரசின் சிறப்பு அனுமதி பெற்று கிரிமினாலஜியில் ஹானர்ஸ் முடித்தான். மீண்டும் பணியில் சேர்ந்த போது, மாநில குற்ற

துப்பறிவு மற்றும் தடுப்புப் பிரிவு ஒருங்கிணைப்பாளராக (state crime detection and prevention coordinator) நியமிக்கப்பட்டான். ஸ்காட்லாந்தில் பயிற்சி பெற்றவன் என மற்ற அதிகாரிகளே மரியாதையுடன் பார்த்தனர். அதில் உள்ளுக்குள் அவனுக்குப் பெருமை.

இவ்வளவு விளக்கம் வேண்டாம் என்பவர்களுக்காக ஒரேவரியில்

கார்த்திக் ஆல்டோ – கிரைம் பிரான்ச் டிஎஸ்பி, ஸ்டேட் கோ ஆர்டினேட்டர் கிரைம் கண்ட்ரோல்.

கார்த்திக் ஆல்டோ கதை முழுதும் நம் கூடத் தான் பயணிக்கப் போகிறான். அவனைப்பற்றி மெதுவாக மேலும் அறிந்து கொள்ளலாம். இப்போது நம் கவனம் அந்த தலை நசுக்கப் பட்ட பெண் பிணம்.

# அத்தியாயம்-3

“பாலா சீன் ஆப் கிரைம் நல்லா பார்த்துடீங்களா? ஏதாவது தடயம் கிடைச்சுதா?” அரை வட்டமாக பாடியை சுற்றி வந்த படியே கேட்டான்.

“தரோவா பார்த்துட்டோம் சார். இந்தப் பொண்ணோட செருப்ப கூட எடுத்திட்டு போயிருக்கானுங்க. சேலை, உள்ளாடை, நகை காதுல இருக்க தோடையும் கழட்டிட்டு போயிருக்கானுங்க. கையில மட்டும் ஒரே ஒரு மோதிரம் இருக்கு. கழட்ட முடியாம விட்டுட்டு போயிருக்கனும்.”

“டாக் வச்சு ஸ்மெல் பண்ணி பார்த்தீங்களா?”

“ரோடு வரை போய் குலைச்சுட்டு படுத்துகிருச்சு சார்.”

“உங்க கெஸ் என்ன? எப்படி கொலை பண்ணிருப்பாங்க?”

பக்கத்தில் உள்ள பெரிய பாறாங்கல்லை காட்டி, “இதை வைத்து தலையை நசுக்கியிருக்காங்க. கல் முழுக்க இரத்தமும் சதையும் ஒட்டி இருக்கு.”

“க்ருயல். ரிபீட்டடா திரும்பத் திரும்ப தலையிலேயே கல்லை வைத்து அடிச்சுருக்காங்க. கல்லுல நிறைய இடத்துல சதை அழுத்தமா ஒட்டியிருக்கு”

“ஒருவேளை ரிவெஞ்சா இருக்குமோ சார்?”

“இருக்கலாம். அடையாளம் கண்டுபிடிக்காம இருக்க, முகத்தை சிதைக்கவும் இருக்கலாம்”

“இந்த இடத்தை நல்லா அலசி பார்த்துடுங்க”

“ஓகே சார்”

மெதுவாக நடந்துகொண்டே சுற்றிலும் பார்த்தான் ஆல்டோ. பொட்டல் வெளி போல இருந்த அந்த இடம் முழுவதும் பாட்டில் துண்டுகள். கார் நிறுத்துவதற்கு ஏற்ற இடவசதி, உட்கார ஏதுவாக பொட்டல். தமிழ் குடிமகன்கள் தங்கள் கைவரிசையால் இடங்களை நிறைதிருந்தனர்.

“என்ன பாலா இவ்வளவு பாட்டில் உடைஞ்சு கிடக்கு? குடிகாரன்களோட பெவோரைட் இடம் போலேயே”

“சென்னை சிட்டி லிமிட் தாண்டி ஹைவேல இருக்க எல்லா இடத்துலயும் நீங்க இதைப் பார்க்கலாம் சார்”

நடந்து வந்த ஆல்டோ திடீரென நின்று உற்றுப் பார்த்தான். அனைத்து உடைந்த பாட்டில்களும் காலியாய் இருக்க ஒரே ஒரு உடைந்த பாட்டிலின் அடிப்பாகத்தில் பொன்னிற திரவம் சிறிதளவு தெரிவோமா வேண்டாமா மின்னியது.

“பாலா நேற்று இரவு மழை பெய்ததா?”

“ஒருமாசமா ஒரு சொட்டு மழை இல்ல. வெயில் தான் கொளுத்துது”

“இந்த பாட்டில்ல லிக்யுட் இருக்கு பாருங்க. போரன்சிக் ஆளுங்கள வச்சு கலெக்ட் பண்ண சொல்லுங்க.”

“ஆமா சார். இதுல இருக்கது சரக்கா தான் இருக்கணும். நேத்து நைட் தான் அடிச்சுருக்கணும். அதான் இன்னும் காயல.”

“இன்னொரு பாசிபிலிடியும் இருக்கு. யாராவது உச்சா போயிருக்கலாம். ஆடு, மாடு நாய் கூட.”

உடைந்த பாட்டிலின் மேல் பாகம் சிறிது தூரத்தில் இருந்தது. அதன் மூடியில் பாண்டிச்சேரி அரசு முத்திரையுடன் மது நாட்டுக்கு வீட்டுக்கு உயிருக்கு கேடு என அச்சடிக்கப்பட்ட ஸ்டிக்கர். ஒரு கான்ஸ்டபிள் கையில் கிளவுசுடன் இரண்டையும் பத்திரப்படுத்தினார்.

“சார் பாடியை முண்டியம்பாக்கம் அனுப்பிடலாமா?” பாலாவிடம் ஏட்டு கேட்டார். பாலா ஆல்டோவைப் பார்க்க, ஆல்டோ புரியவில்லை என தலையை ஆட்டினான்.

“விழுப்புரம் மெடிக்கல் காலேஜ்”

“ஓ. ஓகே ஓகே. அனுப்பிடலாம்”

# அத்தியாயம்-4

“ஹலோ”

“ஹலோ. என்ன பண்ணிட்டு இருக்க”

“இப்ப தான் சமையல் செய்யுறேன்.”

“இவ்வளவு லேட்டாவா?”

“என் புருஷனே கேக்கல. நீ ரொம்ப தான் பண்ற”

“அந்த ஆளு செய்யாததை தான நான் செய்யணும்.”

“செய், செய். சாப்டியா?”

“சாப்டேன். இன்னைக்கு காஞ்சிபுரம்.”

“உன் வாழ்க்கை தான் ஜாலி. எப்ப பாரு ஊர் சுத்துற. நான் இந்த வீட்டுக்குள்ளயே அடைஞ்சு கிடக்குறேன்.”

“உன்னை நானா வர வேண்டாம்னு சொல்றேன். நீ மட்டும் வெளில வா. உனக்கு புது உலகத்தையே காட்டுறேன்.”

“வந்தா என்ன காட்டுவ?”

“உனக்கு வெளியில இருக்க உலகத்தையும் காட்டுறேன். உள்ள இருக்க உலகத்தையும் காட்டுறேன்.”

“உனக்கு வாய்ல தான் சாமர்த்தியமே.”

“அதையும் காட்டுறேன்.”

“பேசிப் பேசியே கவுத்துரு”

“கவுக்க முடியலையே இன்னும்”

“எனக்கு மட்டும் ஆசை இல்லையா. வரேன். பொறுமை”

“ம்ம் ஓகே. பை.”

“பை.”

# அத்தியாயம்-5

திரு. கார்த்திக் ஆல்டோ என பெயர் பலகை தாங்கிய மங்கிப் போன மஞ்சள் நிறக் கட்டிடம். தான் ஒரு அரசு குவார்ட்ரஸ் என சத்தியம் செய்து சொல்லிக்கொண்டிருந்தது. உள்ளறையில் ஆல்டோ, கேஸ் பைலையே முறைத்துக் கொண்டிருந்தான். இது என்ன தலையும் இல்லாமல் வாலும் புரியாமல் ஒரு கேஸ். மீண்டும் பொறுமையாக யோசித்தான்.

கொல்லப்பட்டவர் – தெரியாது.

கொலை செய்தவர் – தெரியாது.

கொலை தானா? – வாய்ப்பு அதிகம்

அங்கு தான் கொலை செய்யப்பட்டாரா? – ஆம். கல்லில் இரத்தக்கறை உள்ளது.

மோட்டிவ் – தெரியாது

தடயங்கள் – கையில் இருந்த மோதிரம், இரத்தக்கறை கல், உடைந்த பிராந்தி பாட்டில்.

இவ்வளவு தான். என்ன செய்யலாம்?

1. கொலை செய்யப்பட்டவரை கண்டுபிடி
2. மோட்டிவ் கண்டுபிடி
3. கொலையாளி சிக்குவான்.

ஒருவேளை கொலை செய்யப்பட்டவரை கண்டுபிக்க முடியவில்லையெனில்?

அனைத்து வழிகளிலும் யோசி.

விசாரணையை எந்த திசையில் ஆரம்பிப்பது?

ஒரு முடிவுக்கு வந்தவனாய் போனை எடுத்தான். இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணனுக்கு கால் செய்தான்.

“பாலா, நான் தான் ஆல்டோ.”

“சொல்லுங்க ஆல்டோ. ஏதாவது ஐடியா கிடைச்சுதா? எனக்கு மண்டை வலி வந்தது தான் மிச்சம்.”

“அந்த மோதிரத்தை வச்சு விசாரிச்சு பார்த்தீங்களா?”

“ரொம்ப பழைய மோதிரம். நகைக்கடை சீல் எல்லாமே அழிஞ்சு போயிருக்கு. அதைப்பற்றி பெருசா தகவல் கிடைக்குறது கஷ்டம் தான்.”

“கல்லுல இருக்க இரத்தக்கறை அந்த பொண்ணோடது தானா?”

“ஆமா. அந்த பொண்ணோடது தான்.”

“போஸ்ட் மார்டம் ரிப்போர்ட் வந்துருச்சா? எனி யூஸ்புல் பாயிண்ட்ஸ்?”

“இறந்தது இரவு சுமார் இரண்டு மணி முதல் மூணு மணிக்குள். தலையில் தாக்கியதால் மரணம். வயது சுமார் முப்பத்தைந்து. உடலுறவு தடயம் உள்ளது. வன்புணர்வு தடயம் எதுவும் இல்லை. மண்டை ஓடு, முக எலும்புகளை சூப்பர் இம்போஸ் செய்ய கொடுத்திருக்கோம். பாய்சன் எதுவும் இல்லை.”

“கிரேட். நிறைய தகவல்கள்.”

“அந்த பாட்டிலில் இருந்தது அல்கஹால் தான். நல்லவேளை உச்சா இல்லை. மூடி ஸ்டிக்கரில் இருக்க பார்கோட் வச்சு ஏதாவது தகவல் கிடைக்குமான்னு பார்க்க பாண்டிக்கு ஒரு டீம் போயிருக்கு.”

“ஓகே. ஏதாவது புது இன்பார்மேசன் கிடைச்சா உடனே தகவல் கொடுங்க. நானும் ஒர்க் அவுட் பண்றேன்.”

“ஓகே அல்டோ. சீ யூ.”

# அத்தியாயம்-6

இரவு சரியாக உறங்காதது தலைவலி கொடுத்தது. கனவில் கூட தலை சிதைந்த முகம் வந்து நான் யார் என்று கண்டுபிடி என கிண்டலாக சொல்லியது. பொதுவாக ஆல்டோ துப்பறியும் கதைகளை விரும்பிப் படிப்பான். சிறுவயதில் இருந்தே காமிக்ஸ் மற்றும் துப்பறியும் கதைகள் தான் அவனது பொழுதுபோக்கே. ஆனால் நிஜத்தில் அவனது அனுபவங்கள் அனைத்தும் வித்தியாசமானவை.

துப்பறியும் கதைகளில் பெரும்பாலும் பிளட் பஸ்டர், பிரெயின் ஸ்டாப்பர் போன்ற வழக்கத்திலேயே இல்லாத மருந்துகளை செலுத்துவர். புதிய கண்டுபிடிப்புகளையும் அதிநவீன கருவிகளையும் பயன்படுத்துவர். தொழில்நுட்ப ரீதியில் நிறைய விசயங்களை செய்வார். சொல்லிவைத்தார்போல அனைத்து கதைகளும் அப்படித்தான் இருக்கும். கொலை செய்யப்பட போகிறவருக்கு பூங்கொத்தில் மிரட்டல், ஈமெயில், எஸ்எம்எஸ், கடிதத்தில் விடுகதை போன்ற வாசகம் அல்லது தத்துவம் போன்றவற்றை அனுப்புவது என கவித்துவமாக வேறு செய்வர்.

ஆனால் ஆல்டோ நேரில் சந்தித்த வழக்குகளில் இவற்றை எல்லாம் பார்த்ததே இல்லை. ஏனெனில் கொலை செய்பவர்கள் எழுத்தாளர்கள் இல்லையே. கவித்துவமாக செய்வதற்கு. அவர்கள் கொலை செய்வார்கள். அவ்வளவு தான். அதே போல கதைகளில் துப்பறிவாளர்களுக்கு கொலையாளிகளால் ஆபத்து வரும் அதை அவர்கள் எதிர்கொண்டு சண்டை எல்லாம் போடுவார்கள். ஆனால் ஆல்டோவை பொறுத்தவரை மற்ற போலிஸ் பிரிவினரை விட இது மிகவும் பாதுகாப்பானதாக தோன்றுகிறது. புத்திசாலி குற்றவாளிகள் எப்போதும் தாக்குவதற்கோ அல்லது வேறு காரணத்திற்காகவோ விசாரணை அதிகாரியை தொடர்பு

கொள்வதே இல்லை. அப்படி ஏதேனும் செய்தால் அதன் காரணமாகவே மாட்டிக்கொள்கிறார்கள்.

அல்டோவிற்கு மிகவும் கஷ்டமான விஷயம் என்றால் “குற்றவாளியை எப்போது பிடிப்பீர்கள்?” என்ற கேள்விதான். இந்த கேள்வியின் லாஜிக் என்ன என்று என அல்டோவிற்கு புரிவதே இல்லை. இது என்ன திட்டமிட்ட வேலையா? டாரென்ட்டில் படம் டவுன்லோட் செய்வதைப் போல. இத்தனை எம்.பி டவுன்லோட் ஸ்பீட். இவ்வளவு நேரத்தில் டவுன்லோட் ஆகும் என சொல்வதற்கு? எந்த தடயமும் இல்லாத வழக்காக இருக்கும். திடீரென்று முக்கிய தடயம் சிக்கும். அடுத்த ஒருமணி நேரத்தில் கொலையாளி பிடிபடுவார். நன்றாக சென்று கொண்டிருக்கும் வழக்கு ஒரு கட்டத்தில் முட்டுச் சந்தில் நிற்கும். ஆனால் பத்திரிக்கையாளர்களுக்கு பிடித்த கேள்வி “குற்றவாளியை எப்போது பிடிப்பீர்கள்?”. ஒவ்வொரு பத்திரிக்கையாளர் சந்திப்பிலும் தவறாமல் கேட்கப்படும். ஆல்டோவும் வழக்கம் போல கூடிய விரைவில் என பதில் அளிப்பான்.

ஆல்டோவிற்கும் துப்பறியும் கதைகளில் வருவது போல கவித்துவமான, தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தும், புதிய கண்டுபிடிப்புகளை மருந்துகளை வைத்து குற்றம் செய்யும் குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டும் என ஆசை. என்ன செய்வது. தமிழ் நாட்டு குற்றவாளிகள் அந்த அளவு ரிஸ்க் எடுப்பதில்லையே. எதிர்காலத்திலாவது நடக்குமா என்று பார்ப்போம்.

# அத்தியாயம் – 7

நெடுஞ்சாலை விபத்துகளில் சிக்கி சின்னாபின்னமான வாகனங்கள் சூழ இருந்து ஒலக்கூர் காவல் நிலையம். சில வாகனங்கள் உறுப்பு தானம் செய்திருந்தன.

"இந்த கேஸ்ல ஃபர்தர் மூவ் என்ன பண்ணலாம் பாலா?" ஆல்டோ கேட்டான்.

"விக்டிமை கண்டுபிடிப்பது தான் முதல் நோக்கம் சார். அதை முடிச்சாலே ஒரு வெளிச்சம் வந்துவிடும்."

"விக்டிமை எப்படி கண்டுபிடிக்கப் போறிங்க?"

"ஒரு வாரத்தில் தமிழ் நாட்டில் காணாம போன 30-40 வயதுள்ள பெண்கள் லிஸ்ட் கேட்டு எல்லா போலிஸ் ஸ்டேசனுக்கும் அனுப்பிருக்கோம். இதுவரை 17 கேஸ் வந்திருக்கு. ஆனா யார் கூடவும் இந்த பாடி மேட்ச் ஆகல."

"சோ. அந்த முறை பயனில்லை. அடுத்து?"

"கடந்த ஒருமாதத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல் கேட்கலாம் சார்."

"ஓகே. வேற?"

"வேற?"

"அந்தப் பொண்ணு எப்படி அங்க வந்திருக்கனும். எந்த வாகனத்தில் வந்திருக்கனும். எதாவது விசாரிச்சு பாருங்க."

"பக்கத்தில எந்த குடியிருப்புமே இல்லை சார். யாரும் பார்த்திருக்க வாய்ப்பே இல்லை."

"கொலை நடந்த இடத்திற்கு பத்து கிலோமீட்டர் முன்னாடி டோல்கேட் இருக்கு. கொலைநடந்ததாக சொல்லப்படும் அதிகாலை இரண்டு முதல் மூன்று மணி வரை அந்த இடத்தை கிராஸ் செய்த வாகன டிரைவர்களிடம் விசாரிங்க. யாராவது பார்த்திருக்கலாம்."

"ஓகே சார். அந்த லிக்கர் பாட்டில் பாண்டிச்சேரியில் தான் வாங்கிருக்காங்க. பேட்ச் நம்பர் வச்சு கடையை கண்டுபிடிச்சாச்சு. கடலூர் ரோடில் உள்ள ஒரு கடை. இரண்டு நாளைக்குள்ள தான் வித்திருக்கனும்னு சூப்பர்வைசர் சொல்றார். ஆனா யாருக்கு வித்தது என கண்டுபிடிக்கிறுது கஷ்டம்."

"ஒன்னு இவங்க பாண்டிச்சேரியில் லிக்கர் வாங்கிட்டு இங்க வந்திருக்கனும். இல்ல வாங்கிட்டு வந்த யாராவது இங்க கொடுத்திருக்கனும். கடத்தல் சரக்கு திண்டிவனத்தில் கிடைக்குமா?"

"கிடைக்கும் சார். ஆனா இது கடத்தலா இருக்க வாய்ப்பு கம்மி. பெரும்பாலும் மலிவு விலை சரக்கு பாட்டில் தான் கடத்துவார்கள். அதே போல கோரிமேடு பகுதி கடைகளில் இருந்து தான் வரும். கடலூர் ரோடு கடை சரக்கை கடத்துவது அரிது சார்."

"அந்த ஏரியா செல்போன் சிக்னல்களை பார்த்தீங்களா? ஏதாவது கிடைச்சுதா?"
"ஹைவேங்கிறதுனால நிறைய மொபைல் போன் கிராஸ் ஆகுது சார். மேலும் அந்த இடத்தில மூன்று மொபைல் கம்பெனிகளின் ஏழு டவர்களின் சிக்னல் கிடைக்குது. ஆயிரக்கணக்கான நம்பர் வருது சார்."

"அந்த மோதிரம் பற்றி விசாரித்து பார்த்தீங்களா?"

"கடலூர் வள்ளி விலாஸ் கடை மோதிரம் சார். ஆனா பத்து வருடத்திற்கும் மேல் உள்ள பழைய நகை. டிடெயில் கிடைப்பது கஷ்டம் என கூறிவிட்டனர்."

"ஜியாகிரபி தகவல்களைப் பார்க்கும் போது அந்தப் பெண் கடலூர் பகுதியைச் சேர்ந்தவராய் இருக்க வாய்ப்பு அதிகம். அப்படித்தானே?"

"ஆமாம் சார். அது தான் என் சந்தேகமும். கடலூர் பகுதியில் உள்ள அனைத்து போலிஸ் ஸ்டேசன்களிலும் கடந்த ஒரு மாதம் காணாமல் போன பெண்கள், வேறு தொடர்புடைய வழக்குகள் விவரம் கேட்டுள்ளோம் சார்."

"ஓகே. டோல்கேட் வாகன ட்ரைவர்களிடம் விசாரிக்க ஆரம்பிங்க."

"ஷ்யூர் சார்."

# அத்தியாயம் -8

"இப்போ உனக்கு ஒரு சந்தோசமான செய்தி சொல்லப்போறேன்."

"நான் எதிர்பார்ப்பது ஒரே ஒரு சந்தோசம் தான்."

"நான் சொல்லப் போறதும் அதே தான். என் வீட்டுக்காரர் ஒரு மாசம் மலேசியா போறார். கம்பெனியில் இருந்து அனுப்புறாங்க. அங்க மலைப்பகுதியில் வேலையாம். ஃபோன் கூட பண்ண முடியாதாம்."

"அதனால.......?"

"அதனால.... நான் உன்னை பார்க்க வரப்போறேன்."

"சூப்பர். எட்டு மாசம் கழிச்சு இப்பவாச்சும் மனசு வந்துச்சே. என்னைக்கு வர்ற?"

"பொறு. அவர் மலேசியா போகட்டும். அப்ப தான் ஃபோன் தொந்தரவு கூட இல்லாம நாம சந்தோசமா இருக்கலாம்."

"அய்யோ. என்னால வெயிட் பண்ண முடியலயே. டேய் எரும மாடு சீக்கிரம் மலேசியா போடா."

“யேய்! என்ன இருந்தாலும் அவர் உனக்கு சீனியர்.”

# அத்தியாயம் -9

"ஹலோ!!! ஆல்டோ, நான் பாலா பேசுறேன். ஒரு முக்கியமான தகவல். நீங்க சொன்ன மாதிரி அந்த டைம்க்கு டோல்கேட்டை கிராஸ் பண்ணுன எல்லா டிரைவர்களிடமும் விசாரிச்சோம். சென்னை சேலம் ரெகுலர் சர்வீஸ் லாரி டிரைவர் ஒரு முக்கியமான தகவல் சொல்லிருக்கார். சேலம் போலிஸ் அனுப்புன ஆடியோ ரெக்கார்ட் மெசேஜ் உங்களுக்கு வாட்ஸ்ஆப்பில் அனுப்பியிருக்கேன்."

"ஓகே பாலா. நான் கேட்கிறேன்."

அனைத்து வாக்குமூலங்களையும் ஆடியோவாக பதிவு செய்து அனுப்ப வேண்டும் என்பது ஆல்டோவின் வாய்மொழி உத்தரவு. பேப்பரில் எழுதப்பட்ட வெறும் கருத்தாக இல்லாமல் ஆடியோவாக கேட்கும் போது அதில் சில நுண்ணிய தகவல்கள் கிடைக்கலாம் என்பது அவன் எண்ணம்.

அழைப்பைத் துண்டித்துவிட்டு வாட்ஸ்ஆப்பை திறந்தான். ஆயிரக்கணக்கான அன்ரீட் பார்வர்ட் மெசேஜ் குரூப்களைத்தாண்டி பாலகிருஷ்ணனிடம் இருந்து வந்த ஆடியோ மெசேஜை கிளிக் செய்தான். பச்சை வட்டம் ஒரு முழுச்சுற்று சுற்றியபின் கரகரவென்று ஆடியோ ஒலிக்க ஆரம்பித்தது.

"சார் அன்னைக்கு அம்பத்தூர்ல சரக்கு ஏத்திட்டு வந்திட்டு இருந்தேன். எப்பவும் நீங்க சொல்ற அந்த இடத்தில் லாரியை ஓரம் கட்டி சிகரெட் பிடிக்கிறது வழக்கம். அன்னைக்கும் அதேபோல நிறுத்தலாம்னு ஓரங்கட்டப் பார்த்தேன். ஆனா அங்க ஒரு டாக்ஸி நின்னுகிட்டு இருந்துச்சு சார். வெள்ளை கலர் இண்டிகா."

"நம்பர் எதுவும் நோட் பண்ணுனீங்களா?" விசாரிக்கும் காவலரின் குரல்.

"இல்ல சார் ஏதோ டாக்ஸி ஓரங்கட்டிருக்குன்னு விட்டுட்டு போய்டேன் சார். அப்ப எனக்கு எதுவும் சந்தேகம் வரலை சார்."

"பக்கத்தில் யாராவது இருந்தாங்களா?"

"நோட் பண்ணலை சார்"

"நீங்க கிராஸ் பண்ணும் போது என்ன டைம் இருக்கும்?"

"இரண்டறை..... இரண்டேமுக்கால் கிட்ட இருக்கும் சார்."

ஆடியோ மெசேஜ் முடிந்தது. ஆல்டோவிற்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. இந்த கேஸில் முதன்முறையாக மிகப்பெரிய க்ளூ. பரபர வென்று அவனது டிடெக்டிவ் மூளை ஸ்கெட்ச் போட்டது. உடனடியாக காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான். எஸ்.ஐ பாலாவிற்கு ஃபோன் செய்து தயாராக இருக்கும்படி சொன்னான். பாலாவை பிக்கப் செய்து கொண்டு பாண்டிச்சேரி செல்லும் சாலையில் விரைந்தான்.

பாலா ஆரம்பித்தார், "எங்க ஆல்டோ போறோம்?"

"திண்டிவனம்- பாண்டி டோல்கேட்டிற்கு"

பாலா யோசித்தார். ஆல்டோவே விளக்க ஆரம்பித்தான்.

"அந்த டாடா இண்டிகா காரில் ஒன்னு கொலையாளி வந்திருக்கனும். இல்லை கொலை செய்யப்பட்ட அந்தப் பெண் வந்திருக்கனும். ஒரு சின்ன கெஸ் பாண்டிச் சேரியில் லிக்கர் வாங்கிட்டு அங்க போயிருக்கலாம். அந்த கார் இந்த டோல்கேட்டை கிராஸ் பண்ணியிருக்கலாம். டோல்கேட் சிசி டிவி புட்டேஜ் பார்த்தா சில விவரங்கள் கிடைக்கும்."

# அத்தியாயம் -10

"அவர் மலேசியாக்கு போய்ட்டார். திரும்பி வர ஒரு மாசம் ஆகும். அந்த மலைத் தோட்டத்தில் செல்போன் சிக்னல் கூட எடுக்காதாம்.

"ரொம்ப நல்லது. நம்ம பிளானைச் சொல்லு."

"கரெக்ட்டா நாளைக்கு சாயங்காலம் ஆறு மணிக்கு பாண்டி வந்திடுவேன். நீயும் வந்திடு."

"எத்தனை நாள் தங்கப்போற?"

"இங்க பக்கத்து வீட்ல எல்லாம் அம்மா வீட்டுக்கு போறேன்னு சொல்லிட்டேன். உன் கூட ஒரு நாளோ ரெண்டு நாளோ தங்கிட்டு அம்மா ஊருக்கு போகனும்."

"ஓகே. திண்டிவத்தில் என் ஃப்ரெண்ட் வீடு காலியாத்தான் இருக்கு. நம்ம அங்க தங்கிக்கலாம்"

"கல்யாணம் ஆகி இப்ப தான் தனியா வெளில வரப்போறேன்."

"அதான் நான் இருக்கேன்ல. அப்புறம் என்ன தனியா?"

# அத்தியாயம்-11

இரவு ஒன்பது மணியில் இருந்து அதிகாலை மூன்று மணி வரை டோல்கேட்டில் கிராஸ் செய்த அனைத்து வெள்ளைக்கலர் இண்டிகா கார்களையும் குறிப்பெடுத்தனர். கிட்டத்தட்ட அறுநூறு கார்கள்.

பாலாவிற்கு தலை சுற்றியது. "அறுநூறு கார்களின் விவரங்களை எப்படி சேகரிப்பது, அனைவரையும் விசாரித்து முடிக்க கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகுமே. அப்படியே விசாரித்தாலும் ஒருவேளை அந்தக்கார் இந்த டோல்கேட்டை கடந்து சென்றிருக்காமல் இருந்தால்? இங்கு சென்றிருக்கலாம் என்பது யூகம் தானே"

ஆல்டோ யோசிக்க ஆரம்பித்தான்.
"இதில் எத்தனை கார்கள் இரவு மூன்று மணிக்கு முன் ரிடர்ன் வந்துள்ளன?"
பரபரவென செயல்பட்டார்கள்.

"நூற்றி முப்பது கார்கள் மூன்று மணிக்கு முன் பாண்டிக்கே திரும்பிவிட்டார்கள் சார்."

"பாலா மீதி இருக்க எல்லா கார் நம்பரையும் ஓங்கூர் டோல்கேட்டுக்கும், விக்கிரவாண்டி டோல் கேட்டுக்கும் அனுப்புங்க. இங்க இருந்து போற மெயின் ரூட் இவை இரண்டும் தான். எந்தெந்த கார்கள் அவற்றை கொலை நடந்த நேரத்திற்கு முன்னால் தாண்டிப் போயின எனத் தெரிந்தால் அவற்றையும் சந்தேக லிஸ்டில் இருந்து தூக்கலாம்."
உடனடியாக தகவல் அனுப்பப்பட்டது.

"பாலா இந்த விவரங்கள் வர இன்னும் மூன்று மணி நேரமாவது ஆகும். நம்ம போய் சாப்பிட்டு விட்டு வரலாம்."

"ஓகே சார்."

"சீ கல்" ரெஸ்டாரண்ட். ரூஃப் டாப்பில் இருந்து கடற்கரை மிக அழகாக தெரிந்தது.
"ஆல்டோ!" பாலா ஆரம்பித்தார்.
"இந்த என்கொயரியில் எதாவது கிடைக்குமா? ஒரு யூகத்தின் அடிப்படையில் அந்த டிரைவர் சொன்ன இண்டிகா காரை டோல்கேட்டில் தேடுகிறோம். எந்த அளவு இது சரியானது?"

"நீங்க சொல்றது கரெக்ட் பாலா. இது தப்பான யூகமாகவே இருக்கட்டும். மிஞ்சிப் போனா என்னவாகும்? காலையில் இருந்து நாம் அலைந்தது வேஸ்ட். அவ்வளவு தானே. ஆனால் சரியாக இருந்தால்? கேஸில் எவ்வளவு பெரிய முன்னேற்றம் நிகழும்?"

பாலாவிற்கும் ஆல்டோ சொல்வது சரி எனப்பட்டது. பேச்சு அப்படியே அவர்கள் கோச்சிங் படித்த காலத்திற்கு சென்றது. மாம்பலம் மேன்ஷன் வாழ்கையும் கோச்சிங் சென்டர் அனுபவங்களையும் பேசிக் கொண்டிருந்த போது செல்போன் ஒலித்தது.

"கார்த்திக் ஆல்டோ சார்?'
"யெஸ்."
"நான் பாண்டி டோல்கேட் மேனேஜர் பேசுறேன் சார். நீங்க கேட்ட டிடெயில் ரெடி."
"சூப்பர் இப்ப நாங்க அங்க வர்றோம்."

# அத்தியாயம்-12

"நீ சரியா ஆறு மணிக்கு கிளம்பு. பாண்டி பஸ் ஸ்டாண்ட்க்கு வரவேண்டாம். கடலூர் ரோடுலயே இறங்கிக்கோ. நான் வந்து பிக்கப் பண்ணிக்கிறேன். நைட் திண்டிவனத்தில் இருக்க என் ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போவோம்."

"பயங்கரமா பிளான் பண்ற. ரொம்ப ஆர்வமா இருக்க போலயே."

“இருக்காதா பின்ன”

“அங்க இருந்து திருவண்ணாமலை பக்கம் தான. போவோமா?”

“ஏன் காசி ராமேஸ்வரம் போவோமே.”

“ஏய் சும்மா சொன்னேன். நித்தியானந்தா சொந்த ஊர் கூட திருவண்ணாமலை தான். தெரியுமா?”

“அந்தாளு மாதிரி வாழறதுக்கு உடம்பு பூரா மச்சம் வேணும்.”

# அத்தியாயம்-13

பாலாவும் ஆல்டோவும் டோல்கேட் சென்று மேனேஜர் அறையில் அமர்ந்தனர்.

"சார் மொத்தம் 607 வெள்ளை கலர் இண்டிகா கிராஸ் ஆயிருக்கு சார். அதில் 131 மூன்று மணிக்கு முன் பாண்டிச்சேரிக்கே திரும்பிருச்சு. 276 வண்டி திண்டிவனம் சென்னை டோல்கேட்டை இரண்டு மணிக்கு முன்னாடியே கிராஸ் பண்ணி போயிருக்கு. 63 வண்டி விக்கிரவாண்டி டோல்கேட்டை கிராஸ் பண்ணிருக்கு. 137 வண்டி மிச்சம் சார். அதோட நம்பர் லிஸ்ட் இது."

A4 பேப்பரில் பிரிண்ட் அடிக்கப்பட்ட லிஸ்ட்டை கொடுத்தார்.

"இந்த நம்பர் கார்களோட சிசிடிவி புட்டேஜை நான் பார்க்கலாமா?"

"கண்டிப்பா சார்."

தொடர்ந்து இரண்டு மணி நேரமாக அந்த லிஸ்டில் இருக்கும் கார்களின் டோல்கேட் சிசிடிவி காட்சிகளை ஆல்டோவும் பாலாவும் பார்த்துக் கொண்டிருந்தனர். எல்லாம் சொல்லி வைத்தார் போல ஒரே மாதிரி இருந்தன.
வண்டி வந்து நிற்கும். ஓட்டுநர் பணம் கொடுப்பார். சீட்டை வாங்கிக்கொண்டு கிளம்புவார். இதையே இம்போசிஷன் போல தொடர்ச்சியாக பார்த்துக் கொண்டிருப்பது மிகுந்த அயற்சியாக இருந்தது. அல்டோவிற்கும் நம்பிக்கை குறையத் தொடங்கியது. தேநீர் அருந்தினால் நன்றாக இருக்கும் போல தோன்றியது.

"பாலா, கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிட்டு வந்து பார்க்கலாமா?"

"பனிரெண்டரை மணி வரை உள்ள புட்டைஜ்களை பார்த்துவிட்டோம். இன்னும் இரண்டு மூன்று பார்த்தால் ஒரு மணி வரை முடித்து விடலாம்."
பேசிக் கொண்டிருந்தபோது திரையில் வந்த காரைப் பார்த்தான்.

"பாலா, இந்த கார்ல பாருங்க. ஒரு விசயம் உறுத்தலா இருக்கு."

மூன்று நான்கு முறை பாலா அந்த காணொளியை மீண்டும் ஓடவிட்டுப் பார்த்தார். வழக்கம் போல கார் வந்து நின்றது. ஓட்டுநர் பணம் கொடுத்தார். மீதிப் பணத்தையையும் சீட்டையும் வாங்கிய பின் கார் கிளம்பிச் சென்றது.

"ஒன்றும் தெரியலையே ஆல்டோ."

"பொதுவாக நம்ம ஊரில் வாடகைக்கார்களில் முன்னிருக்கையில் பெண்கள் அமர மாட்டார்கள். பின்னிருக்கையில் தான் அமர்வார்கள். வாடகைக் காரின் முன்னிருக்கையில் பெண்கள் அமர்ந்தால் ஒன்று மனைவியாக இருக்க வேண்டும். அல்லது மிகத் தெரிந்தவராக இருக்க வேண்டும். இதுவரை நாம் பார்த்த எந்தக்காரிலும் முன்னிருக்கையில் பெண்கள் இல்லை. ஆனால் இந்தக்காரில் பாருங்கள் ஒரு பெண் இருக்கிறார்."

"இப்போ ஐடி கம்பெனி கேபில் எல்லாம் முன்னிருக்கையில் பெண்கள் உட்காருவது சகஜம் ஆல்டோ."

"தினசரி செல்லும் வண்டிகளில் ஓகே. என்றாவது ஒரு நாள் சொல்லும் காரில், அதுவும் நடுஇரவில் பாதுகாப்பு கருதி பின் இருக்கையில் தான் பெரும்பாலும் அமர்வர். பின் இருக்கைகள் அனைத்தும் நிரம்பியிருந்தால் முன்னால் உட்காருவர். ஆனால் இந்தக் காரில் பின் இருக்கை காலியாக உள்ளது. எதற்கும் இந்த காரைப்பற்றி விசாரியுங்கள்."

அந்தக்காரின் நம்பரை குறித்துக் கொண்ட ஆல்டோ, விழுப்புரம் ஆர்டிஓ அலுவலகத்திற்கு போன் செய்தார்.

"ஹலோ!!! குமார், நான் ஒலக்கூர் எஸ்ஐ பேசுறேன். கேஸ் சம்பந்தமா ஒரு கார் நம்பர் பற்றி விவரம் வேணுமே."

"..............................."

"ஓகே. குறிச்சுக்கோங்க. டிஎன் தர்ட்டி டு ....." பாலா, காரின் எண்ணை கூறி முடித்து சிறிது நேரம் காத்திருந்தார்.

"எஸ். சொல்லுங்க. ஹரி ராஜா, புதிய எண் 12, மேட்டுத் தெரு ஏப்பாக்கம் திண்டிவனம் வட்டம்..
ஓகே. தேங்க்யூ."

"......................."

"ஓகே. அஃபிசியல் ரெக்கொஸ்ட் நாளைக்கு அனுப்புறேன்."

ஆல்டோவிடம் திரும்பினார். "சார் உங்க கெஸ் சரிதான் போல சார். இந்த ஏப்பாக்கம் கிராமம் கொலை நடந்த இடத்திற்கு ரொம்பப் பக்கம் தான்".

"ஆள் யாருன்னு விசாரிக்கச் சொல்லுங்க."

# அத்தியாயம்-14

“ஹலோ!!! நான் கடலூர் ரோடுல நிற்கிறேன். பெட்ரோல் பங்க் பக்கத்துல.”

“நானும் அங்க தான் இருக்கேன். வெள்ளை கலர் இண்டிகா கார்.”

“பார்த்துட்டேன். இதோ வர்றேன்.”

காரின் கதவை திறந்துவிட்டான். முகம் முழுவதும் சிரிப்புடன் ஏறி அமர்ந்தாள்.

“சீக்கிரம் உட்கார். ஒரு நிமிசத்தை கூட வீணாக்க கூடாது.”

“ஏன் இப்படி அலையுற? ரெண்டு நாள் உன்கூட தான் இருக்கபோறேன்.”

“நாப்பத்தெட்டு மணி நேரம் தான். எப்படி பத்தும்?”

“இங்க எனக்கு தெரிஞ்ச ரிசார்ட் ஒன்னு இருக்கு. அங்க கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு போவோம்.”

“நீ ரெஸ்ட் எடுக்க ரிசார்ட்க்கு போற? இதை நான் நம்பனும்?”

“எதுக்குன்னு தெரியுதுல? அப்பறம் என்ன?”

சிரித்துக்கொண்டே காரை விரட்டினான்.

# அத்தியாயம்-15

ஊருக்கு நடுவில் இருந்தது அந்த வீடு.

"இங்க ஹரி ராஜா யாரு? இண்டிகோ கார் வச்சிருக்கார்ல". கதவை தட்டிய ஏட்டையா சாதாரணமாக கேட்பது போல கேட்டார்.

"என் தம்பி தான் சார். என்ன விசயம்?" போலிஸ் யூனிபார்மைப் பார்த்து பயந்தபடியே பதில் சொன்னார் அவர்.

"ஒன்னும் இல்ல. சும்மா டாக்ஸி ட்ரைவர்கள் லிஸ்ட் எடுக்க சொல்லி டிஎஸ்பி உத்தரவு. ஏதோ செக்கிங்காம்."

"ஓ!! ஓகே சார்."

"அந்த காருக்கு யார் டிரைவர்?"

"அவன் தான் சார். காலேஜ்க்கு போகாம கட்சி சாதி சங்கம்னு வெட்டியா சுத்துனான். நான் தான் லோன் போட்டு கார் வாங்கிக் கொடுத்தேன். உருப்படாத பையன். லோன் கூட திரும்ப கட்ட மாட்டேங்குறான். பேங்க் காரன் மாசமான வந்து வீட்டு முன்னாடி திட்டிட்டு போறான்."

"ஏன் சவாரிக்கு போறது இல்லையா?"

"அதெல்லாம் போறான். ஒருநாள் கூட வீட்ல தங்க மாட்டான். குடிச்சே நாசமா போறான்."

"கல்யாணம் ஆயிடுச்சா?"

"இன்னும் இல்லை சார். யாரும் பொண்ணு கொடுக்க மாட்டேங்குறாங்க."

"இப்ப எங்க உங்க தம்பி?"

"திடீர்னு சபரி மலை போறேன்னு நேத்து போய்ட்டான் சார்."

"அவர் நம்பர் இருந்தா கொடுங்க."

# அத்தியாயம் -16

ஏன் காரை இந்த நடு காட்டுல நிறுத்துற?

சரக்கை முடிச்சுட்டு வந்துறேன்.

யப்பா. செம டயர்ட். இங்கயே தூங்கலாம் போல. காத்து சூப்பரா வருதுல?

“ஆமா.. இந்த இடம் தான் எங்களுக்கு வழக்கமா சரக்கு அடிக்குற இடம். காத்தும் நல்லா வரும். யார் தொந்தரவும் இருக்காது.”

அதென்ன எப்ப பாத்தாலும் செல்போனையே நோண்டிகிட்டு இருக்க? அப்படி என்னதான் பாக்குற?

பேசிக்கொண்டே இருந்தவள் எதிர்பாராத நேரத்தில் மொபைல் போனை பறித்தாள். மொபைல் திரையில் ரிசார்ட்டில் அவர்கள் ஒய்வு எடுத்த நிகழ்வு நல்ல தரமான ஒளிப்பதிவுடன் வாட்சாப் வழியே பலருக்கும் சென்றுகொண்டு இருந்தது.

# அத்தியாயம்-17

"கார்த்திக் ஆல்டோ சார், நாங்க ஏர்டெல்ல இருந்து பேசுறோம். நீங்க கொடுத்த நம்பருடைய கால் லிஸ்ட் எல்லாம் மெயில் அனுப்பிருக்கோம். அந்த நம்பர்ல இருந்து ஒரே ஒரு நம்பருக்கு நிறைய கால்ஸ் போயிருக்கு சார். அதுவும் ஏர்டெல் நம்பர் தான். அந்த டிடெயிலும் அனுப்பிருக்கோம்."

"ஓகே. தேங்க்யூ நான் பார்க்குறேன்."

ஒரு நம்பருக்கு தினமும் இரண்டு மூன்று மணி நேரத்திற்கு மேல் அழைப்புகள் சென்றிருந்தன. அந்த நம்பர் பண்ருட்டியில் ஒரு பெண்ணின் பெயரில் வாங்கப்பட்டிருந்தது.

பண்ருட்டி போலிஸிடம் தகவல் சொல்லப்பட்டது. எதிர்பார்த்ததைவிட வெகு சீக்கிரம் வேண்டிய தகவல்கள் வந்துசேர்ந்தன.

"நீங்க சொன்ன அட்ரஸ்ஸில் போய் விசாரிச்சோம் சார். மூன்று நாளா வீடு பூட்டி இருக்காம். அம்மா வீட்டுக்கு போறேன்னு சொல்லி அந்தப் பெண் கிளம்பிப் போனாராம். அவரது அம்மா செல்போனுக்கு போன் பண்ணி கேட்டோம். அங்கு வரவே இல்லையாம்.

# அத்தியாயம்-18

ஆத்திரம் தீரும் வரை பெரிய கல்லை வைத்து முகத்தை சிதைத்தான்.

“கொஞ்சம் அசந்திருந்தா இந்நேரம் நம்மளை கொன்றிருப்பா.. நல்லவேளை. தப்பிச்சோம்.” என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

வீடியோவை அவள் பார்த்ததும், பிறகு சண்டை போட்டதும், இவனை அடிக்க வந்ததும், போலிசுக்கு கால் செய்ய முயன்றதும் ஒரு நொடியில் நிகழ்ந்ததைப் போல இருந்தது. அவள் பெரிய கல்லை தூக்கிக் கொண்டு இவனை நோக்கி வருவதைக் கண்டதும் ஒரு நொடி இதயமே நின்றுவிட்டது. இன்றோடு கதை முடிந்தது என்று தான் நினைத்தான். வேகமாக ஓடிவரும் அவள் காலில், உடைந்த பாட்டில் துண்டு குத்திய போது கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திகொண்டான். தடுமாறிய அவளை கீழே தள்ளிவிட்டான். அந்தக் கல்லையே எடுத்து அவள் தலை மீது போட்டான். ஆத்திரம் தீரும் வரை முகத்தை சிதைத்தான்..

# அத்தியாயம் - 19

அல்டோவிற்கு புரிந்துவிட்டது கேஸ் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது என்று.. சபரிமலைக்குச் சென்ற ஹரிராஜாவை மடக்கினால் எல்லாம் வெளி வந்துவிடும்.

"ஹலோ ஹரி ராஜா! நான் மூர்த்தி பேசுறேன். என் மாமா நாளைக்கு திருப்பதி போகனுமாம். கார் கிடைக்குமான்னு கேட்டார்."

"மூர்த்தி நான் இப்ப சபரிமலை ரிடர்ன். நைட்குள்ள ஊருக்கு வந்துருவேன். நாளைக்கு எத்தனை மணிக்கு திருப்பதி போகனும்?"

"மதியத்திற்கு மேல தான். தெரிஞ்ச வண்டின்னு நான் தான் உன்னைச் சொன்னேன். நாளைக்கு போலாமா?"

"நைட் வந்துருவேன். ஒன்னும் பிரச்சனையில்ல. நைட் ரெஸ்ட் எடுத்தா நாளைக்கு போகலாம். வேற வண்டி புக் பண்ண வேண்டாம்னு சொல்லு."

"ஓகே ராஜா"

போனை கட் செய்துவிட்டு நடுங்கியபடியே கூறினான் மூர்த்தி "நைட் வந்துடுவானாம் சார்."

"அவனை பிடிக்கிற வரை நீ இங்க தான் இருக்கனும்" என செல்போனை வாங்கிக் கொண்டார் பாலகிருஷ்ணன்.

கிட்டத்தட்ட இருபது காவல்துறையினர் ராஜாவின் வீட்டைச் சுற்றி வளைத்து மறைந்து இருந்தனர். இது எதையும் அறியாமல் வாசலில் வந்து காரை நிறுத்தினான். சட்டம் தனது கடமையை செய்ய ஆயத்தமானது.

# பின்கதை

பாண்டி சீகல் ரெஸ்டாரன்ட் ரூஃப் டாப். ஒரு வாரத்திற்குப்பிறகு....

"அவன் எதுக்கு கொலை செய்தானாம் பாலா?"

"அவன் நண்பனுடைய ரீசார்ஜ் கடையில் இந்தப் பெண்ணோட நம்பரை எடுத்திருக்கான். போனில் பேசிப்பேசி தன வலையில் விழுக வைத்திருக்கான். அவளை பாண்டிச்சேரி வரவைத்து ஜாலியா இருந்திருக்கான். அதை வீடியோ எடுத்து நண்பர்களுக்கு அனுப்பிருக்கான். அந்த பொண்ணு கண்டுபிடிச்சுருச்சு. நடந்த கைகலப்புல கொன்னுட்டான். எந்த ஆதாரமும் இல்ல. மாட்ட மாட்டோம்னு தைரியமா சுத்திருக்கான்."

"ஆதாரத்தை மறைக்கலாமே தவிர உண்மையை மறைக்க முடியாது.." என்றபடி ஆப்பிள் ப்ளேவர் பகார்டி ப்ரீசரை குடிக்க ஆரம்பித்தான் கார்த்திக் ஆல்டோ.

◆ ◆ ◆